ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் நேர்முக உதவியாளரின்

செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு சு.பார்த்திபன், B.Sc.,

ந.க.எண். இ6/23489/2004 நாள்.14.10.2022.

பொருள்: பணியாளர் தொகுதி– கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு கடலூர் மாவட்டம் – சிதம்பரம் – அரசு நந்தனார் (பெண்கள்) மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் – திருமதி வீ.ஐம்புலவாசுகி என்பவரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (ப) எண்.196, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந7) துறை, நாள்.30.09.2022.

&&&&&

ஆணை:

பார்வை 1–இல் காணும் அரசாணையில் ஆதிதிராவிடர் நலத்துறையில் கருணைஅடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, கடலூர் மாவட்டம், சிதம்பரம், அரசு நந்தனார் (பெண்கள்) மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி வீ.ஐம்புலவாசுகி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 05.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் திருமதி வீ.ஐம்புலவாசுகி, இளநிலை உதவியாளர் என்பவர் முதல் ஆண்டு ஊதிய உயர்வு மட்டுமே பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

பெறுநர்.

திருமதி வீ.ஐம்புலவாசுகி,
இளநிலை உதவியாளர்,
அரசு நந்தனார் (பெண்கள்) மேல்நிலைப்பள்ளி,
சிதம்பரம்,
கடலூர் மாவட்டம்.

(தலைமையாசிரியர் மூலம் தனியருக்கு சார்வு செய்யும் பொருட்டு).

நகல்.

1. அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
   ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
   நலத்துறை, தலைமைச் செயலகம்,
   சென்னை–9.
2. தலைமை ஆசிரியர்,
   அரசு நந்தனார் (பெண்கள்)
   மேல்நிலைப்பள்ளி,
   சிதம்பரம்,
   கடலூர் மாவட்டம்.
3. "இ5" இருக்கைக்கு.
4. முக்கிய ஆவணத் தொகுப்பு.

ஆதிதிராவிடர் நல இயக்குநர் அலுவலகம்
11 OCT 2022
சென்னை-5

<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் - திருமதி. வீ. ஜம்புலவாசுகி என்பவரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-7)துறை</u>

அரசாணை (ப) எண். 196 நாள்: 30.09.2022

சுபகிருது வருடம்,
புரட்டாசி மாதம் 13 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2053,

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. ஆதிதிராவிடர் நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.இ6/ 23489/2004, நாள்.20.10.2021.

<u>ஆணை:-</u>

மேலே இரண்டில் படிக்கப்பட்ட, ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம், அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தபோது 03.04.2002 அன்று காலமான திரு.எம்.வீராச்சாமி என்பவரது மகள் திருமதி.வீ.ஜம்புலவாசுகி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, 05.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு, அதனடிப்படையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, கடலூர் மாவட்டம், சிதம்பரம் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும், திருமதி.வீ.ஐம்புலவாசுகி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 05.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திருமதி.வீ.ஐம்புலவாசுகி இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்..

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா. எண்16442/ட்டி1/2022, நாள்.26.09.2022 மற்றும் அ.சா.எண். 65643// ஜி2/ 2022, நாள்09.09.2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் , சென்னை-5
திருமதி.வீ.ஐம்புலவாசுகி, இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்
(ஆதிதிராவிடர் நல இயக்குநர் வழியாக)
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை - 18 / 35.
மாவட்ட கருவூல அலுவலர் , கடலூர்

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்